Register No. [ | | | | | | | ]

# FTE

**3983–18**

(For the candidates admitted from 2009-2010 to 2013-2014)

B.A., B.L. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018.

(Five Years Regular Course)

Fifth Year — Tenth Semester

## INTELLECTUAL PROPERTY LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றில் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the importance of TRIPs agreement in harmonizing the protection of Intellectual Property.

   அறிவுசார் சொத்துரிமையை பாதுகாப்பதை ஒருங்கிணைப்பதில் டிரிப்ஸ் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை விளக்குக.

https://www.tndaluonline.com

2. **Define "Copy Rights", Explain the subject matters that can be protected under the Copyright Act 1957?**

பதிப்புரிமை என்பதை வரையறை செய்து பதிப்புரிமை சட்டம் 1957ன் கீழ் பாதுகாக்கப்படக் கூடிய பருப்பொருட்கள் என்ன என்று விளக்குக.

3. **Define the concept of "Patent", and explain the inventions that are Non-Patentable under the Patents Act 1970.**

"காப்புரிமை" எனும் பதத்தை வரையறுத்து காப்புரிமை சட்டம் 1970 ன் கீழ் காப்புரிமை பெற இயலாத கண்டுபிடிப்புகள் என்ன என்று எடுத்துரைக்கவும்.

4. **Discuss the procedure to be followed for the Registration of a Trade Mark.**

ஓர் வணிக முத்திரையினைப் பதிவு செய்வதற்க்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை விளக்குக.

5. **Define "Industrial Design", and explain the remedies available in case of Infringement of Copyrights in a Design under the Designs Act 2000.**

"தொழிலக வடிவமைப்பு" என்பதை வரையறுத்து வடிவமைப்பு சட்டம் 2000ன் கீழ் வடிவமைப்பின் பதிப்புரிமை மீறலுக்கு உண்டான தீர்வழிகள் என்ன என்று விளக்குக.



## PART B — (8 × 6 = 48 marks)

6. **Write short answers on Eight of the following not exceeding 2 pages each:**

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடையளிக்கவும்:

(a) **World Trade Organisation.**

உலக வர்த்தக மையம்.

(b) **Deceptive Similarity.**

ஏமாற்றும் வகையில் ஒத்திருத்தல்.

(c) **Infringement of Copyrights and its remedies.**

பதிப்புரிமை மீறல் மற்றும் அதற்கான தீர்வழிகள்.

(d) **Compulsory licence for Patents.**

காப்புரிமைகளுக்கானக் கட்டாய உரிமம்.

(e) **R.G. Anand Vs. Delux Films AIR 1978 SC 1613.**

ஆர்.ஜி. ஆனந்த் எதிர் டிலக்ஸ் ஃபிலிம்ஸ் AIR 1978 SC 1613.

(f) **Aravind Laboratories Vs. Annamalai Chettiar AIR 1981 NOC 13.**

அரவிந்த் லேபரட்டரீஸ் எதிர் அண்ணாமலை செட்டியார் AIR 1981 NOC 13.

(g) **Patent Agent.**

காப்புரிமை முகவர்.



https://www.tndaluonline.com

(h) Trade Secret and Confidential Information.

வணிக இரகசியம் மற்றும் இரகசிய தகவல்.

(i) Infringement of Trademark.

வணிக முத்திரை மீறல்.

(j) Terms of various copyright subject matters.

பல்வேறு வகையான பதிப்புரிமைப் பருப்பொருட்களின் பாதுகாப்புக் காலம்.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Christy is a photographer in a Daily Newspaper at Chennai. The News paper Management send her to take photograph on behalf of the News paper management. Accordingly she took some photos. But Christy wants to publish the photos independently. Advise to Christy.

கிறிஸ்டி என்பவர் சென்னையில் வெளியாகக்கூடிய தினசரி நாளிதழ் ஒன்றின் புகைப்படகாரராக பணிபுரிந்து வருகின்றார். அந்த தினசரி நாளிதழின் நிர்வாகம் அவரை தங்களது நிறுவனத்திற்காக சில புகைப்படங்களை எடுப்பதற்காகச் சொல்ல அவரும் அவ்வாறே புகைப்படம் எடுக்கின்றார். ஆனால் கிறிஸ்டி அதை தன்னிச்சையாக பிரசுரிக்க விரும்புகிறார். அவருக்கு அறிவுரை வழங்குக.



8. Priya is an Advocate. She took a xerox copy of a Judgement from a reputed Journal without getting consent from the author of the Journal. Explain whether Priya committed any infringement.

பிரியா என்பவர் ஒரு வழக்கறிஞர். அவர் ஒரு மதிப்பு மிகுந்த பத்திரிக்கைத் தொகுப்பில் இருந்து ஒரு நீதிமன்ற தீர்ப்பினை அதன் பதிப்பாசிரியரின் அனுமதியின்றி நகல் எடுக்கிறார். பிரியா ஏதேனும் உரிமை மீறல் புரிந்துள்ளாரா என விளக்குக.

9. Agarwal (P) Ltd had been manufacturing medicines under the trade mark 'Pfizero'l' to treat Jaundice. Orange (P) Ltd started to manufacture disinfectants under the same mark "Pfizerol". Agarwal (P) Ltd objects. Decide.

அகர்வால் (பி).லிட் எனும் மருந்து தயாரிக்கும் நிறுவனம் "ஃபைசரால்" எனும் வணிக முத்திரையின் கீழ் மஞ்சள் காமாலைக்கு மருந்து தயாரித்து வந்தது. ஆரஞ்ச்(பி) லிட் எனும் நிறுவனம் கிருமி நாசினி ஒன்றினை அதே "ஃபைசரால்" என்ற முத்திரையில் தொடங்கியது. அகர்வால் (பி) லிட் அதை எதிர்க்கிறது. முடிவு செய்க.

10. Bonds is a manufacturer of Talcum powder by name "Palmolive". Cinthal is an another manufacture of Talcum powder under the name "Lemon live". Bonds filed a suit against Cinthal for infringement. Is it valid?



https://www.tndaluonline.com

பான்ட்ஸ் என்பவர் "பால்மோலிவ்" எனும் பெயரில் டால்கம் பவுடர் தயாரித்து வருகின்றார். சிந்தால் எனும் மற்றொரு தயாரிப்பாளர் "லெமன்லிவ்" எனும் பெயரில் டால்கம் பவுடர் தயாரித்து விடுகிறார். பான்ட்ஸ் என்பவர் சிந்தால் என்பவருக்கு எதிராக உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்கிறார். இது செல்ல தக்கதா? முடிவு செய்யவும்.

11. **'X' invented a new medicine from a well known herbal plant and applied for Patent for the new product. Discuss its validity.**

'X' என்பவர் நன்கு அறியப்பட்ட மூலிகை செடியில் இருந்து புதிய வகை மருந்து ஒன்றினை கண்டுபிடித்து அந்த தயாரிப்புக்குக் காப்புரிமை வேண்டி விண்ணப்பிக்கிறார். இதன் செல்லும் தன்மையை ஆராய்க.

12. **A new variety of rice 'Amman 2017' is invented and grown by Amman. He applied for patent. Will he succeed in acquiring patent for the new variety. Discuss.**

அம்மான் என்பவர் "அம்மான் 2017" எனும் புதிய இரக நெல் ஒன்றினைக் கண்டுபிடித்து வளர்த்து வருகின்றார். அவரது படைப்பிற்கு காப்புரிமை கோரி விண்ணப்பம் செய்கின்றார். அவர் காப்புரிமை பெறுவதில் வெற்றிபெறுவாரா? விவாதிக்கவும்.

---



https://www.tndaluonline.com